Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/3??? of 1953.

விரோதிஞு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதி ளூ தைமீ உக உ வெள்ளிக்கிழமை (5 February. 1965) [இல-ச சு]

## செய்தித்தாள்களும் அதன் உரிமைகளும்

[ திரு. வை. முத்துக்குமாரசுவாமி B. A. அவர்கள் ]

இன்று உலகத்திலுள்ள எல்லா மக்களுடைய உள்ளங்களையும் உறுததும் பிரச்சனை செய்தித்தாள்களைப் பொறுத்தது என்பதில் எட்டுணையேனும் ஐயமில்லை. செய்தித்தாள்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். ஆனல் எல்லாக் காலங்களிலும், எல்லாச் சூழ்நிலையிலும் அவ்வாறு இயங்க வேண்டுமென்பதல்ல சமூகத்தில் ஒரு புரட்சி ஏற்படும் பொழுதோ, வேறு அபாயம் ஏற்படும் பொழுதோ, பொது நலம் ஆபத்தில் இருக்கும் பொழுதோ செய்தித்தாள்கள் சுதந்திரமாக இயங்க முடியாது.

அமெரிக்கா சுதந்திரநாடு. அந்நாட்டுத்தலைவர் ஜெபேசன் கருத்தைச் சிந்தியுங்கள். அவர் கூறுகிருர்:- "மக்கள் கருத்தை ஒட்டியே எங்கள் அரசாங்கத்தின் அடிப்படை அமைந்து இருப்பதால் அரசாங்கமோ அல்லது செய்தித்தாள்களோ எது தேவைப்படும் என என்னைத்தீர்மானிக்கக்கூறினல் நான் பின்னல் குறிக்கப்பட்டதையே விரும்புவேன். விளக்கமாகக் கூறின் ஒவ்வொரு மனிதனும் இச் செய்தித்தாள்களைப் பெற்று வாசிக்கும் சக்தி உடையவனக இருத்தல் வேண்டும். செய்தித்தாள்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் நிலையம் தணிக்கைப் பகுதியே. அது போர்க்காலத்தில் மட்டும் தொழிற்படும்,

ஒரு செய்தித்தாளானது நாட்டிலுள்ள எல்லா மக்களின் கருத்துக்களையும் அடக்கும் சாதனமாக இருக்க முடியாது. ஆனல் அவவாறு செய்வதற்குப் பல செய்தித்தாள்கள் தேவைப்படுகின்றன இன்று செய்தித்தாள்களது உரிமையாளர்களிடம் என்ன என்ன செய்திகளை வெளியிடவேண்டும, எப்படி வெளியிட வேண்டும் என்றெல்லாம் தீர்மானிக்கும் சக்தி காணப்படுகின்றது.

இன்று மக்கள் எண்ணிக்கை பெருகிவிட்டது. மக்கள் செய்தித்தாள்கள்மூலமாகத் தாம் பெறும் செய்திகள் உண்மையானவையா? பொய்யானவையா என்பதை அறியத்தக்க வல்லமை உடையவர்களாக இருக்கவேண்டும்.

சனசமூகமானது சுதந்திரமாக வாழ்வதாயின், அக்காலத்திற்கு ஏற்றவாறு செய்திச் சுதந்திரம் இருக்க வேண்டும். செய்த்தாள்கள்மூலம் சமூக ஊழல்களை அம்பலப்படுத்துதல் அவசியம். ஒரு செய்தித்தாள் உண்மையில் நல்ல சேவையைச் செய்ய வேண்டுமானல், அது பல திறப்பட்ட கருத்துக்களைத் தன் அகத்தில் அடக்கி இருத்தல் அவசியம் அல்லவா? சுதந்திரமாக இருக்க வேண்டும் தான்; ஆனல் அது பொறுப்பு உணர்ச்சியுடன் தொழில்புரிய வேண்டும். செய்தித்தாள்களில் பொய்ச் செய்திகள் இடம்பெறக்கூடாது. செய்தித்தாள்களின் உயர்ச்சி அவற்றிற்குச் செய்தி அறிவிப்பவர்களிடமே தங்கியிருக்கிறது.

பத்திரிகை ஆசிரியர்களின் முக்கிய கடமைகளில் ஒன்று, செய்திகள் வேருகவும் கருத்துகள் வேருகவும் வகுதது வெளியிடுதல வேண்டும். செய்திகளை உண்மைப்படி அனுப்புவது மட்டும் போதாது செய்தியின் உண்மையை அலசி அறிதல் அவசியம் ஆகும். தனிப்பட்ட நிகழ்ச்சி ஒன்று முழுச்சமூகத் தொகுதியினரால் செய்யப்பட்டது என்னும் தவருன எண்ணம் மக்கள் மனதில் எழவிடக்கூடாது.

செய்தித்தாள்கள் என்ருல் ஒவ்வொரு "காக்கான் மூக்கானின்" கருத்துக்களையெல்லாம் தாங்கிய சாதனம் அல்ல என்பது யாவரும் அறிந்ததேயாகும். ஒரு செய்தித்தாள் பலரின் கருத்துக்களை எடுத்துக் கூறும் சாதனமாக விளங்க வேண்டும். பல்வேறு முரண்படும் கொள்கைகளை ஒரே செய்தித்தாளில் வெவ்வேறு பெயர்களின் கருத்துக்களாக வெளியிடுவதில் ஒரு பிழையுமில்லை. செய்தித்தாள்கள் மக்களின் கருத்தைக் காண்பிக்கும சமூகக்கண்ணுடி ஆகும்.

இன்றைய நாட்களில் செய்தித்தாள்கள் வெளியிடுவதானல் பல புதிய அச்சுக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும் வானெலி, தொலைபேசி, தொலைக்காட்சி முதலியன யாவும் பத்திரிகைகளுக்குச் சாலவும் உதவுகின்றன. செய்தித்தாள்கள ஒரு நாட்டின் "கண்களும் காதுகளும்" என்ருல் அது மிகையாகாது,

இன்று பல செய்தித்தாள்கள் ஒரு பிரசுர நிலையத்தில் இருந்தே வெளிப்படுகின்றன. சில செய்தித்தாள்கள் இலாபம் ஈட்டுதலை மாத்திரமே தம் இலட்சியமாக [illegible] இன்றன; அவை [illegible]

நலத்தைக் கருதுவதாகத் தோன்றவில்லை.

இலங்கை அரசாங்கம் "லேக் ஹவுஸ்" பத்திரிகைகளை எடுக்கப் பல பத்திரிகை [illegible]

---

### நற்சிந்தனை

ஐஞ்செழுத் தாலே சஞ்சல<br>
மழிந்தது<br>
ஐஞ்செழுத் தாலே பஞ்ச<br>
மொழிந்தது<br>
ஐஞ்செழுத் தாலே ஆனந்த<br>
மாயிற்று<br>
ஐஞ்செழுத் துள்ளே அடங்கி<br>
நின் றேனே.

---

## நல்லூர் யமுனரியை விவசாயத்திற்குப் பயன்படுத்துக!

நாயன்மார்கட்டு கிராமமுன்னேற்றச்சங்கத் தீர்மானங்கள்

—O—

நல்லூர் ராஜதானியில் அமைந்திருக்கும் 'யமுனரி'க்கேணி வற்ருத நீரினை யுடையது. இந்த நீரினைப் பயன்படுத்தினல் அயலிலுள்ள கிராமங்கள் வளம்பெறலாம். அதனல் உழவுத்தொழில் விவசாயம்போன்றவை விருத்தி அடைவதுடன், இவ்வாண்டைப் போன்று சாலமழை அருகிப்போகுங் காலங்களிலும், கோடைகாலங்களிலும் பயிர்ச்செய்கைக்கு மிக உபயோகமாயமையும் நிலாவரைபோன்ற வற்ருத நீரினை யுடைய இக்குளத்தை வளம்படுத்துவதால் இப் பகுதியிலேயுள்ள ஏராளமான ஏழை விவசாயிகள் பெரும் பயன் அடைவார்கள். யாழ்ப்பாணம் பாலைவனமாகி விடுமோ என்ற அச்சம் எழுந்திருக்கும் இந்நாளில் யாழ்ப்பாணம் முழுவதும் பயன்பெறப்போதாதிருப்பினும் ஒருசில கிராமங்களாயினும் வளம்பெறும்முறையில் இக்குளத்தை நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ்க் கொணர்ந்து வேண்டிய செயன் முறைகளைக் கையாளும்வண்ணம் வேண்டுகின்ருேம்". இவ்வாறு முதலமைச்சரையும், வடமாகாண அரசாங்க அதிபரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று, நாயன்மார்கட்டுக் கிராமமுன்னேற்றச்சங்கத்தில் ஏகமனதாகநிறைவேறியது. இத் தீர்மானத்தின் படிகள் நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர், யாழ் மாநகரசபை, யாழ்ப்பாணப் பகுதிக் கமத்தொழிற் பிரிவு ஆகியவற்றிற்கு அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், யாழ் கண்டி வீதிவழியே செல்லும் விசை வண்டி (பஸ்) களுள் ஒருசிலவற்றை செம்மணிவீதிவழி முத்திரைச்சந்தை, நல்லூர் மார்க்கமாகச் செல்லக் கூடிய தாக இ. போ. சபை யாழ். நிர்வாகிகளுடன் தொடர்புகொண்டு வேண்டிய ஒழுங்குகளைக்கவனிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பெற்ற இக் கூட்டம் சென்ற 1-2-65-ல் ஷ சங்கத் தலைவர் திரு. இ சரவணமுத்து அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

-நாயன்மார்கட்டு "நாதன்"

---

## பொதுமக்களே! உதவுங்கள்!!

### புயல் நிவாரண நிதிக் குழுவின் விண்ணப்பம்

மன்னர், திருக்கோணமலை, மயிலிட்டி முதலிய இடங்களில் அன்று வீசிய அசுரப்புயலின் கொடிய விளைவுகளைப் பற்றியும் எல்லையற்ற இன்னல்களைப்பற்றியும் இப்போதுதான் பூரணமான விபரங்கள் கிடைத்துள்ளன.

இந்த விபரங்களைக் கேட்கும்போது நெஞ்சம் நடுங்குகின்றது. மன்னரிலும் திருக்கோணமலையிலும் நேர்ந்துள்ள பொருட்சேதத்திற்கு எல்லை சொல்ல முடியாது. வீடு முதலிய உடைமைகள் யாவற்றையும் இழந்து திக்கற்றுத் திண்டாடுவோர் ஆயிரக்கணக்கில் அங்கு உளர் என அறிகின்ருேம்.

ஆனல் மயிலிட்டியிலும் செம்பியன்பற்றிலும் அதனை அடுத்துள்ள கரையோரப்பகுதிகளிலும், மீனவர் மத்தியில் ஏற்பட்டுள்ள உடைமைச் சேதம் மிகப் பெரும் அளவினதேயெனினும், அங்கு ஏற்பட்ட உயிர்ச்சேதமே மிகப் பெருந்தொகையினதாய்த் தீராத் துயர்தருவதாய் நெஞ்சையுருக்கி நிற்கின்றது.

கணவரை இழந்தவர்களும், கணவரோடு தந்தையரை இழந்தவர்களும், தந்தையரோடு சகோதரர்களை இழந்தவர்களுமாய்க் கிடந்து தவிக்கும பெண்களின் பெருந்துயருக்கு விமோசனமே இல்லை என்னும் அளவிற்கு அங்கு சோகம் பொங்கிக் கிடக்கின்றது.

மகனை மட்டுமா இழந்தாள் ஒருதாய்? கணவனையும் இரண்டு மருமக்களையும் ஒரு சேர இழந்து, தானும் தன் பிள்ளைகள் இருவரும் விதவைகளாய், ஒரு முழு விதவைக் குடும்பமாக, ஆதரவளிக்க ஒரு ஆடவன் கூட இலலாத அனதைக் குடும்பமாக அல்லவா, அந்த அவலத்தாயின் குடும்பம் இன்று மாறிவிட்டது!

இதுபோலப் பல பெண்கள் இன்று அவலக் கடலில் அமிழ்ந்திக் கிடக்கின்ருர்கள். இவர்களுக்கெல்லாம் வாழ்வே போய் விட்டது. கதியற்றவர்களாய், சோகக் கண்ணீர் வடித்தவண்ணம் இருக்கும் இவர்களுக்கு என்றுதான் விடிவுகிடைக்குமோ என்று ஏங்குகின்றது நாடு!

இவர்களுடைய துன்பத்தைத் துடைத்து ஆதரவளிக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபடத் தொடங்கியிருப்பதை யாம் அறியாமல் இல்லை. எனினும் அரசாங்கத்தின் திட்டம் ஒரு நீண்டகாலத் திட்டம். வீடுகள், தொழில் வசதிகள் முதலிய அம்சங்களைக் கொண்ட அதன் புனர் வாழ்வுத் திட்டம் உருவாகிச் செயற்படக் காலம் எடுக்கும.

ஆகவே உடனடித் தேவைகளாகிய உணவு, உடை முதலியவற்றிற்கு அரசாங்கம் வழங்கும் சகாயம் மிகவும் சொற்பமாயிருப்பதால், பொது மக்களாகிய யாமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மயிலிட்டியிலும் செம்பியன்பற்றிலும் அதனை அடுத்துள்ள கரையோரப் பகுதிகளிலும் உயிரிழந்தோர் தொகை 178. இந்த உயிர்ச்சேதத்தால் நிர்க்கதியாய்த் தவிக்கும் குடும்பங்களின் தொகை 168.

இத்தனை குடும்பங்களுக்கும் மாதம் ஒன்றிற்கு முப்பது ரூபாய்க்குக் குறையாமல் ஒரு ஆண்டு வரைக்குமாகுதல் பொது மக்கள் உதவவேண்டும் என்று கருதப் படுகிறது

இந்தக் குடும்பங்களில் சிலவற்றைத் தாங்கும் பொறுப்பைச் சில சமூக நலச் சங்கங்கள் ஏற்றுக் கொள்ள முன்வந்திருக்கின்றன, இதனைப் போல் ஏனைய சங்கங்களும், தனிப்பட்ட செல்வர்களும் புண்ணியவான்களும் தங்கள் தங்களாலியன்ற உதவியைத் தாமதமின்றிச் செய்ய முன்வரவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்ருேம்.

செல்வத்தின் பயன் ஈதலே. அதுவும் இத்தகைய கொடிய இன்னலில் அகப்பட்டோர்க்கு ஈவதே செல்வமுடையார் ஈட்டிக் கொள்ளும் தலைசான்ற புண்ணியமாம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

உடைந்தவர்க்கு உதவாராயின் உள்ளது ஈயாராயின்<br>
அடைந்தவர்க்கு அருளாராயின், அறம் என்னும்? ஆண்மை என்னும்?<br>
என்பது மானிட தர்மத்தின் குரல்.

இந்த நாட்டில் அறமும் ஆண்மையும் உயிரோடு இருக்கின்றன என்ற நம்பிக்கையோடு சமர்ப்பிக்கப் படும் இவ்விண்ணப்பத்திற்குப் போதிய ஆதரவு கிடைக்கும் என நம்புகின்ருேம்.

உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் விலாசத்தோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

Dr. K. கனகரத்தினம்<br>
தலைவர்.

195, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

E. P. இராசையா<br>
காரியதரிசி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஹூ தை மீ
உரு உ வெள்ளிக்கிழமை

## இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு சைவாலயம்

இலங்கைப் பல்கலைக்கழக இந்துவாலிப சங்கத்தாரால் 1964—65ம் ஆண்டுச் சிறப்பு மலராக வெளியிடப்பட்ட 'இந்து தர்மம்' என்னும் சஞ்சிகை எமக்குக் கிடைத்தது. அதிலுள்ள ஆசிரியத் தலையங்கம் இப்பத்திரிகையில் வேறோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் இந்துமாணவர்களின் சமய அறிவுக்கும் சமய வாழ்க்கைக்கும் ஒரு சைவாலயம் அவசியம் தேவையெனவும் ஷை கழகப் பாடத்திட்டத்தில் இந்துக் கலாச்சாரம் ஒரு பாடமாக்கப்பட வேண்டுமெனவுங் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்துமாணவர்கள் தங்கள் சமய விதிகளின்படி கடவுள் வழிபாடு செய்ய இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இதுவரைகாலமும் ஒரு சைவாலயம் அமைக்கப்படாமை பெருங் குறையாகும். மாணவர்கள் மன ஒருமைப்பாட்டுடன் இறைவனை வழிபடுதற்கு ஆலயம் சிறந்த சாதனமாகும். பொறியியற் பகுதியைப் பேராதனைக்கு மாற்றியதன் காரணமாக இந்து மாணவர்கள் தொகை அதிகரித்து விட்டதெனவும், இந்துமாணவர்கள், பசனை பண்ணும் அறை அவர்களுடைய வழிபாட்டுக்குப்போதாமலிருக்கின்றதெனவும் காட்டபபட்டிருக்கின்றன. ஆலயவழிபாட்டிலே நாட்டமுள்ள மாணவர்கள் இதன் காரணமாகக் கண்டிமாநகரம் முதலிய இடங்களிலுள்ள சைவாலயங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது.

மற்றைய சமயங்களைப் பின்பற்றும் மாணவர்களுக்கு ஆலயங்கள் காலத்துடன் அமைக்கப்பட்டு அம்மாணவர்கள் தங்கள் தங்கள் சமயமுறைப்படி அவ்வாலயங்களில் வழிபாடாற்றிவருகின்றனர். இந்து மாணவர்களுக்கு இதுவரை காலமும் அங்கு ஒரு ஆலயம் அமைக்கப்படாமை இந்நாட்டிலுள்ள இந்து மதத்தவர்களுடைய சமயாபிமானக்குறைவை விளக்கி நிற்கின்றது. அங்கு கல்வி பயிலும் இந்துமாணவர்கள்தான் பிற்காலத்தில் எங்கள் நாட்டுத் தலைவராக வருகின்றவர்கள், அவர்கள் சமய அடிப்படையில் கல்வி கற்க வேண்டிய வசதிகளை உண்டுபண்ண வேண்டியது இந்துக்களுடைய முக்கிய கடமையல்லவா?

இந்துமாணவர்கள் சமய அறிவை விருத்திபண்ணுவதை கெகிழவிட்டால் அவர்கள் நாத்திகக்கொள்கையைப் பின்பற்ற நேரிடும். அதனால் அவர்கள் நாட்டுக்குப் பயனுள்ள சேவைகளைச் செய்ய முடியாமற் போய்விடும்.

'கற்றதனா லாயபயனேன்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்."

மெய்யறிவினையுடைய இறைவன் திருவடிகளை வணங்குவதே கல்வியின் நோக்கமாகும். இறைவன் திருவடியை இறைஞ்சுகின்றவர்களே தமக்கும் பிறர்க்கும் உதவியாளர்களாகத் திகழ்வார்கள்.

பல்கலைக்கழக இந்து வாலிபர் சங்கத்தின் புதிய செயற்குழு அங்கு ஒரு சைவாலயம் அமைக்கும் முயற்சியில் ஊக்கங்கொள்ளல் வேண்டுமென இந்து தர்ம இதழாசிரியர் ஒரு விண்ணப்பம் செய்துள்ளார். நமது நாட்டிலுள்ள இந்துசமயத்தவர்கள் யாவரும் இவ்விஷயத்தில் கவனமெடுத்து இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஒரு சைவாலயம் நிறுவ முயற்சி செய்ய வேண்டும். இதற்கென இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள இந்துக்கள் ஒரு திருப்பணிச் சபையை நிறுவி அதன் மூலம் அங்கு ஒரு சைவாலயம் அமைக்க உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும. இது இந்துக்களுடைய அத்தியாவசியமான கடமையாகும்.

### உரும்பராய் கருணாகரப்பிள்ளையார்கோயில் தேர்க்கொட்டகைத் திருப்பணிக்குக் கலைவிழா

உரும்பராய் கருணாகரப்பிள்ளையார்கோயில் தேர்க்கொட்டகைத் திருப்பணி நிதிக்காக ஒரு கலைவிழா உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நாளை (6-2-65) நடைபெறஇருக்கின்றது. திரு ஆ. தனபாலசிங்கம் வழக்கறிஞர் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்விழாவை திரு. வே த. செல்வத்துரை அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள். திரு. அங்கப்பா கோஷ்டியாரின் நாதஸ்வர இசையை அடுத்து திருமதி. தையல் சுந்தரம் பரந்தாமனின் இன்னிசை விருந்தும் கொக்குவில் கலாபவனத்தாரின் "குறிஞ்சிக்குமரன்" என்னும் மகோன்னத நாட்டிய நிகழ்ச்சியும் இலங்கை வானொலி நாடகத்துறைத் தலைவர் திரு. எஸ். சண்முகநாதன் (சானா) கோஷ்டியார் தயாரித்தளிக்கும் "மததாப்பு" என்னும் நாடக நிகழ்ச்சியும் இடம் பெற இருக்கின்றன. ராஜ் நாடக மன்றத்தலைவர் திரு. இரத்தினம் (ராஜ்) அவர்களும் இவ்விழாவில் கலந்துகொள்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இக்கலைவிழாவிற்கலந்துகொள்வதோடமையாமல், வேறுபலவழிகளிலும் சைவஅன்பர்கள்பொருளுதவி செய்து மேற்படி கோவில் தேர்க்கொட்டகைத் திருப்பணி நிறைவேற ஒத்துழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளும் தனியாக விடுக்கப்பட்டுள்ளது. பொருளுதவி செய்பவர்கள் மு. பசுபதி உரும்பராய் என்ற முகவரியோடு தொடர்புகொள்ளவும்.

## ஆசிரியர்கள் தேவாரப் பண் பயில்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கொக்குவில் திரு. மு குமாரசிங்கம் அவர்கள் திருநெல்வேலி கல்லூரி வீதியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆச்சிரமத்தில் ஆசிரியர்களுக்கு தேவாரப்பண முறைகளைக் கற்பித்து விடுகின்றார்கள். பண்டைக் கால முறைப்படி தேவாரங்களின் பண்முறைகளைக் குருமுறையாக அவர் கற்றறிந்தவர். பண் முறைகளைச சுரவரிசை செய்தும வைத்திருக்கின்றனர். இவர் நீராவியடி வேதாரணியம குருக்கள மடத்தில் ஸ்ரீமத் ஐயாச்சாமிக் குருக்களிடம் ஆரம்பத்தில் தேவாரப் பண் முறை பயின்றவர். பின்பு வண்ணார்பண்ணையில் வசித்த சங்கீத வித்பன்னர் சோமுவிடம் சுரவரிசை பயின்றவர். அதன்மேல் தென்னிந்தியா இசைவாணன் ஸ்ரீமத் இ. அப்பாச்சுவாமி ஓதுவார் மூர்த்தியிடம் கர்நாடக சங்கீதமும் தேவாரப் பண்முறையும் பயின்றவர். திருப்புகழ்மணி சயினுபிள்ளையிடம் திருப்புகழையும் சுரவரிசைப்படுத்தி ஓதும் முறையையும் பயின்றவர்.

இவ்விதமாகச் சங்கீத ஞானத்தையடைந்த பெரியாருடைய ஞானத்தை மக்கள் பெற்றுக்கொள்ளுதல் நலமென்னும் நல்ல நோக்கத்துடன் பண்டிதமணி அவர்கள் இப்பெரியாரை அழைத்துச் சங்கீதக் கலையறிந்த ஆசிரியர்களுக்கு தேவாரப் பண்முறைகளையும் திருப்புகழ் ஓதும் முறைகளையும் கற்பிக்கும் ஒழுங்கைச் செய்துள்ளனர். மனத்தை ஒருமுகப்படுத்தி இறைவனடியைப் பற்றச் செய்தற்கு இசை ஒரு சிறந்த கருவியாகும் ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவியாகவுள்ள இந்த இசைச் செல்வத்தை நாட்டில் பரப்ப வேண்டுமென்பதே பண்டிதமணியவர்களின் நோக்கம். இது அரிய சந்தர்ப்பம். மேற்படி வகுப்பிலே இதுவரை சேராத சங்கீத ஆசிரியர்கள் உடனே அதிற் சேர்வார்களாக. நமது நாட்டிலே சைவத்தையும் தமிழையும் வளர்க்கச் சிறந்த சாதனங்களாகவுள்ளன திருமுறைகளே. அவற்றை முறைப்படியோதக் கற்றுக்கொண்டாற்றான் நாங்கள் கருதிய பயனையடையலாம்.

## வேதாரண்யம் மகோதய புண்ணிய காலம்

வேதங்கள் பூசித்த காரணத்தால் திருமறைக்காடெனவும் பஞ்சோதி முனிவர் தாயுமான சுவாமிகள் அவதாரஞ் செய்த தலமும் மூவர்பெருமக்களால் தேவாரம் பாடப்பெற்றதும் மாபலிச் சக்ரவர்த்தி தோன்றுவதற்கு ஏதுவாகவுள்ளதுமாகிய ஸ்ரீ வேதாரணியேஸ்வரத்தில் 1–2–65 தை அமாவாசையும் திங்கட்கிழமையும் திருவோணமும் வியதீபாதயோகமும் கூடிய சூரியோதய புண்ணிய காலத்தில் கோடிக்கரையில் வேதாரணியேஸ்வரசுவாமி கடலாடும் விழா நடைபெற்றபொழுதும் [illegible] வித்துவான் திரு. [illegible] வேங்கடராமையா M. A;. B. O. L. வேதாரண்ய மகோதயச் சிறப்பு என்னும் பொருள்பற்றியும் திரு தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள் திருமுறைச் சிறப்பு என்னும் பொருளைபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்களென ஸ்ரீ வேதாரணய சுவாமி தேவஸ்தானம் பரம்பரைத் தர்மகர்த்தா ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டாரசந்நிதி அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள்

1. (I) சைவப்புலவர் தேர்வு

| | |
|---|---|
| செல்வி: சி. இராசேஸ்வரி | (நாவலர் பாடசாலை) |
| செல்வி: வை. தயல்நாயகி | (நாவலர் பாடசாலை) |
| திரு. க. நடராசா | (வாணி கலைக்கழகம்) |
| செல்வி; த. தங்கமணி | (வாணி கலைக்கழகம்) |

(II) சைவப்புலவர் தேர்வில் நூனசித்தி

| | |
|---|---|
| திருமதி. சிவநிதி கதிரவேலு | (கொக்குவில்) |
| திரு. இ. பரமகுரு | (வாணி கலைக்கழகம்) |
| செல்வி: வெ. சௌபாக்கியநாயகி | (வாணிகலைக்கழகம்) |
| செல்வி: த. நல்லநாயகி | (வாணிகலைக்கழகம்) |
| திரு. சு. கணபதிப்பிள்ளை | (வாணிகலைக்கழகம்) |
| செல்வி: பொன்னம்மா வல்லிபுரம் | (வாணிகலைக்கழகம்) |

(III) இளஞ் சைவப்புலவர் தேர்வு

| | |
|---|---|
| திரு. வை. வேலாயுதம் | (ஏழாலை மேற்கு) |

2. (1) சித்தாந்த பிரவேச பண்டிதர் தேர்வு

| | |
|---|---|
| திரு. சு. தம்பாபிள்ளை | (அரியாலை) |
| திரு. வை, இராமகிருஷ்ணஐயர் | (புளியங்கூடல்) |
| திரு. க. கனகராசா | (கைதடி) |
| திரு. ச, செல்வத்துரை | (யாழ்ப்பாணம்) |

(II) சித்தாந்த பாலபண்டிதர் தேர்வு

| | |
|---|---|
| திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை | (வேலணை) |
| செல்வி: சி. சின்னத்தம்பு | (கொட்டடி) |

## உருத்திரபுரம் காந்தி நிலைய மாணவர் இல்லம் புயல் நிவாரண வேண்டுகோள்

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக நாங்கள் மிகவும் அரும்பாடுபட்டுச் சிறிது சிறிதாகக் கல்லுக்கல்லாகக் கட்டி எழுப்பிய காந்திநிலைய அநாதைகள் இல்லம் அண்மையில் வீசிய அசுரப்புயலால் அழிந்துகிடக்கின்றது.

ஊறுபடாத ஒரு கட்டடம் கூட எஞ்சவில்லை, எல்லாக் கட்டடங்களும் கூரைகள் எடுத்தெறியப்பட்டு வீழ்ந்து உடைந்து கிடக்கின்றன, சில கட்டடங்களின் சுவர்களும் தூண்களும் வெடித்துச் சிதைவுற்றுக் கிடக்கின்றன.

ஆதரவற்ற அநாதைக் குழந்தைகளை நிழல்தந்து காத்த இந்தக் கருணையுள்ள கூரைகளைக் கொடிய புயல் அழித்த விட்டமையால் இக்குழந்தைகள் சில நாட்களாக அயலிலே உள்ள ஒரு அன்பரின் சிறு குடிசையிலே தஞ்சம்புகுந்தார்கள். ஆனல் இப்போது நிலையத்திற்குள்ளேயே ஒரு மண் கொட்டிலை அடைத்து தங்குவதற்கு உரிய வசதிகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றோம.

இந்த நிலைமையில் எமது நிலையமடைந்துள்ள அழிவுகளை நிவர்த்தி செய்து மீண்டும் அதனை உருவாக்க உடனடியாக ரூபா 17,000–00 பதினேழாயிரம் வேண்டும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அநாதைப் பிள்ளைகள்சார்பிலும் காந்திய தத்துவத்தின்சார்பிலும் கரவாது உவந்து பணமுதவும் வண்ணம் உங்கள் கருணை உள்ளங்களுக்கு இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

பணம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திறகு அனுப்பலாம். கட்டடப் பொருள், உணவு, உடை முதலியன அனுப்ப விரும்புவோர் கிளிநொச்சிப் புகையிரத நிலைய மூலமாகக் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

கௌரவ தனதிகாரி, அல்லது நிர்வாகி,
காந்தி நிலையம், உருத்திரபுரம்

## ஆசிரியருக்குப் பிரியாவிடை

"உலகத்திலே பல அறிஞர்கள் தோன்றுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைகளில் காட்டுக்கு உழைக்கிறார்கள். இவர்களையெலலாம் உற்பத்தி செய்வது ஆசிரியர்க்குலமே. இத்தகைய சிறப்புவாய்ந்த ஆசிரியர்க் குலத்தைச் சேர்ந்தவர்தான் நமது சுந்தரராசன்."

இவ்வாறு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலிருந்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு மாற்றலாகிச் செலலும் திரு நா. சுந்தரராசன் அவர்களுக்கு நடைபெற்ற பிரியாவிடை உபசாரத்திற்குத் தலைமை வகிததுப் பேசிய பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்கள் கூறினார்கள்,

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரிய கழகத்தின் ஆதரவில் 25-1 65-ல் நடைபெற்ற இக்கூடடத்தில் மேற்படி கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவகுருநாதபிள்ளை, ஆசிரியர் திரு. சி. சுப்பிரமணியம், திருமதி. ரி. வேலாயுதம் பிள்ளை, திரு. மு. பத்மநாபன், திரு. கந்தரத்தினம், திரு, கருணாநிதி ஆகியோரும் அன்னாரின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

கழகத்தின்சார்பில் ஆசிரியருக்கு ஒரு அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் அருளிச்செய்த

# சிவப்பிரகாசம்

(முற்றொடர் 3)

## இந்நூற் செய்யுட் கருத்து

இந்தச் சிவப்பிரகாச நூலிற் செய்யுள் நூற்றுக்குங் கருத்து ஏதென்னில்:

பாயிர மீராறு, பதியாறு, பல்லுயிரொன்,
றேயுந் திரோதமல மொன்றென்பர், — தூயபத
முத்தி தருமாயை யொன்றாகு, மூவுலகிற்
புத்தி தருமாயைப் புணர்ப்பாறு, — பெத்தம்விட
நன்றுதீதா கும்வினை நாலாகு, நாடோறுந்
துன்று மலத்தின் தொகையொன்று, - பொன்றவருங்
கேவல மைந்து, கிளக்கி லுயிருக்குப்
பாவுணர்த்தும் வைகரியின் பாலிரண்டு, தேவர்களுங்
கூடுஞ் சகலநா லைந்தாகுங், கூடுமலம்
விடுகின்ற சுத்த வியப்பொன்று, நீடுமின்ப
முத்தியொன் றாக, மதித்தருளால் முன்னோர்கள்
பத்தியாற் சொன்ன பரிசினு — வித்தலமே
லுண்மை யுரைக்கி லுயிருண்மை யொன்பதா,
நண்ணவத்தை மூன்று, நலமாக — வெண்ணரிய
தன்னை யுணர்த்துந் தகையைந்து, தன்னுணர்த்து
மன்னுணர்வின் ஞான வகைமூன்று, — பின்னுயிரை
மாசறவே காணும் வகையைந்து, மற்றதனி
லாசொழிக்குந் தன்மை யதுநான்கு, — தேசனுருப்
பார்வையறப் பார்க்கும்வகை பத்தாம்,பஞ் சாக்கரத்
தைத்
தேரும் வகைமூன்று, தெரியுங்கால் — சீர்மருவு
மன்பாற் சிவனை யநுபவிக்கு மெய்யடியா
ரின்பப் பகுதி யிருமூன்று, — துன்பமறச்
சொற்றரு நூலின் கருத்தொன்று, சொற்றருநூ
னற்றவருக் கீயு நலமொன்று — முற்றவரும்
பந்த மறுத்த சகநாதன் பார்வையென
வந்தளித்த சம்பந்த மாமுனிவ — னெந்தைபதஞ்
சென்னியின்மேல் வைத்துச் சிவப்பிரகா சக்கருத்தை
யன்ன வயற்காவை யம்பலவ — னன்னயத்தாற்
சொன்னு னெழுபிறப்புந் தொல்லைவினை யுந்தீர
மன்னு கமத்தை மதித்து.   எ—து கண்டுகொள்க.

## இந்நூற்றிருவடிவரைவு மதிகாரமும் வரும் வகை

இந்நூலுக்குத் திருவடி வரைவும் அதிகாரமும் ஒக்க வரும் வகையாவது:

ஓங்கு, பரந்த, நலம் வளம் தேவர்,பார்
ஈங்கிவை யாறும்மிறைவன் வணக்கம்;
புறச்சம யத்தவர் நூற்கருத் தாகும்;
மூவகை. விரும்பிய கிரியை யெனமூன்றும்
ஆவது தீக்கா முறைமைய தாகும்;
தெரித்த, தொன்மை யெனவிவ் விரண்டும்
விரித்த நூன்மர பவையடக் கம்மே;
பலகலை, நீடி,ங் குலகங் கந்தம்,
ஏற்றவிவ் வாறு மிறைவ னிலக்கணம்,
எண்ணரி தொன்றும் பசுவி னிலக்கணம்;
ஏகமா யொன்று மலமுந் திரோதமும்;
முன்ன லொன்றுங் குடிலையி னியல்பாம்;
முருவாதி, யென்னை, படைத்த, வல்லல்,
அருத்தி, மன்னிய வாறு மசுத்தத்
திருத்தகு மாயையின் செய்திய தாகும்;
நண்ணிய, கன்ம, வேலை, யுற்றவென்
றெண்ணிய நான்குங் கன்மத் தியல்பே;
மோக மிகவென் றெண்ணிய வொன்றும்
வேக மிகுமல மைந்தின் விதியே;
யோங்,கின்மை, மாயை யங்கியம், புகலு
மீங்கிவை யைந்துங் கேவலத் தியல்பே;
வந்தடைந், தித்தகை, பேசரி, யையவகை,
யந்த மில்லலகில், குணமான தனுவுடன்,
சொன்ன, மூந்தி, யிங்கிலை, தோற்றி
யன்ன பத்துஞ் சகலவ வத்தையே;
இளைய, நாடி யெனவிவ் விரண்டும்
மூனைவன் சுத்த மூறைமைய தாகும்
அரிவைய ரொன்றும் பரசம யத்தவர்
மருவிய முத்தியின் வாய்மைய தாகும்;
மென்னும் பொதுவியல் விருத்த மைம்பதின்
மன்னிய கருத்தை வகுத்தனன்; இப்பால்,
இங்கிவை யொன்று முண்மையிற் பாயிரஞ்;
செறிந்திடு, மூருவுண, ரறிவெனில் வாயி,
லறிவினு, லெவ்வறி வசத்தறிந் ததுவுஞ்,
சத்திது, கண்ணொளி, யோரிடத் தெட்டும்
இத்திற மான்ம விலக்கண மாகும்;
எண்ண, விவ்வகை, நீக்கமின் மூன்றும்
அண்ண லளித்த வவத்தைய தாகும்;
மருவிய, தனகனெனக் கண்டறி புல்னக,
ளிருணனி யறிந்திடு மிவையோ ரைந்தும்
பொருவிலான் மாவை யுணர்த்தல் புகலும்;
காட்டிடும், பன்னிற, மாயையிம் மூன்றும்
ஊட்டு ஞான வாய்மையை யுரைகரும்;
தேசுற மும்மையின பாரிப்ப தாகும்;
தன்னறி, தத்துவ முறைதரு சுத்த
மின்னவை நான்கு மன்னுயிர்த் தரிசனம்;
புகலரு, மின்றுநோக், கிங்கிலை, யடைபவர்
இகலறு நான்கு மிலங்குயிர்ச் சுத்தி;
பொற்புறு, மொடுங்கிடா, பற்றிடு, மூந்திய,
சொற்பெறு பாசம், விளம்பிய பாவிக்கில்,
ஒன்றிரண் டாகி, யழிந்திடு, மெல்லை
யென்றிவை பத்து மிலங்குயி ரிலாபம்;
பந்தந், திருவெழுத் தைந்தி, லாசுறு
மந்தமின் மூன்று மைந்தெழுத் தருணிலை;
தீங்குறு, குறிப்பகம், அண்ட,மண் தொண்டரென்
றீங்கிவை யாறு மணைந்தோர் தன்மை;
நிலவுல கொன்றும் நூற்கருத் தாகும்;
திருவரு ளொன்று மருளுறை நூலைக்
கொடுகரு முறைமைப் பகுதிய தாகுமென்
றிப்படி யுமாபதி தேவ னுரைத்த
மெய்ப்படு சிவப்பிர காச விருத்தக்
கருத்தின துண்மை விரித்துரைத் தருளினன்;
[illegible] நாதன்,
[illegible] ருனே.   எ—து.
கண்டுகொள்க.

—வளரும்.

# எமது கருத்து

[இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் கழகத்தாரால் அண்மையில் வெளியிடப்பட்ட 'இந்து தர்மத்தின்' ஆசிரியத் தலையங்கத்தை இங்கே வெளியிடுகிறோம் ஆ-ர்]

ஆ என்பது ஆன்மா எனவும், லயம் என்பது லயப்படுதல் - ஐக்கியப்படுதல் எனவும் பொருள்படுவன. ஆகவே சைவ சமய முறைப்படி மனத்தை ஒருமைப்படுத்தி வணங்க வேண்டுமாயின் ஆலயம் அவசியமாகின்றது,

பேராதனைப் பல்கலைக் கழகத்திலே இந்து மாணவர் சங்கம் தொடங்கிய காலந் தொட்டு ஆலயமமைப்பதைப் பற்றிப் பேசப்பட்டும் 'இந்து தர்மங்களில்' எடுத்துக்காட்டப்பெற்றும், சில நேரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் வந்தன. ஆனால் இவற்றினால் இன்னும் எவ்வித உறுதியான விளைவொன்றும் ஏற்படாதிருப்பதுடன் "ஆலயம் அமைப்பது'' என்னும் உறுதியும் தளர்ந்துள்ளது. மற்றைய ஆண்டுகளை விட இவ்வாண்டில் இந்து மாணவர்களின் தொகை பொறியியற் பகுதியைப் பேராதனைக்கு மாற்றியதன் விளைவாக மேலும் பெருகியுள்ளமையினால் தற்காலிக பஜனை அறையிற்கூட இட நெருக்கடியேற்பட்டுள்ளது. இதன் காரணமாகவும் வேறு சில காரணங்களாலும் சைவ மாணவர்கள் கண்டி முதலிய இடங்களுக்கு வணக்கங்களுக்கு ஆலயங்களை நாடிச் செல்கின்றனர். இந்நிலையில் ஓர் ஆலயம். அன்றேல் ஒரு தியான மண்டபமாவது அவசியமாகின்றது. ஆகவே இம்முறை அங்கத்துவம் வகிக்கும் செயற்குழு ஆலயத்தைப் பொறுத்தவரை புதிதாக ஒன்றும செய்யாவிடினும் இனிமேல் வரும் அங்கத்தவர் குழுவாகுதல் பொது மக்களின் உதவியுடன் ஏற்ற முயற்சிகளைச் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

பௌத்த பண்பாடு என்னும் பாடம் பல்கலைக்கழகத்தில் பயிற்றப்படுவது போன்று இந்துப் பண்பாட்டையும் ஒரு பாடமாகச் சேர்த்துக்கொளளுதல் அவசியமானதொன்றாகும். இப்பாடத்தை மாணவர்கள் பயில்வதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுப்பது எமது பல்கலைக்கழகப் பெரியார்களைப் பொறுத்தவொன்றாகும். இவ்வகுப்பு இந்துசமய வளர்ச்சிக்குக் காரணமாக விருந்து ஆவன செய்யுமென்பது உறுதி

சைவமும் தமிழும் ஒன்றுயிணைந்துள்ளதென அறிஞர் கூறுவர். ஆனால் இவ்விணைப்பு எங்கள் பல்கலைக்கழகத்தில் வெளிப்படையாக நன்றே காணப்படுகிறதா என்பது கேள்விக்குரிய விடயமாயுள்ளது. எம்மைப் பொறுத்தவரை தமிழ்ச்சங்கத்துக்கும் இந்துமாணவர் சங்கத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பேற்படுவதால் இவ்விணைப்பு மேலும் பலமாகக்கூடும். அத்துடன் எமது பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயிலும் மாணவர்கட்கும் ஏனையோர்க்கும் பதினன்கு சைவ தத்துவ சாத்திரங்களில் சிவஞானசித்தியாரில் சில சூத்திரங்களைத் தவிர வேறு சித்தாந்த நூல்கள் பயிற்றப்படாதிருப்பது சைவமும் தமிழும் ஒன்றேயென்னும் கூற்றுக்கு ஓரளவு முரணுகக்காணப்படுகின்றது. ஆகவே தமிழைச் சிறப்புப் பாடமாகப்பயிலும் மாணவர் கட்காவது சைவ சித்தாந்த

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## இரங்கற்பா

[சைவப்பெரியார் சு நடேசபிள்ளை அவர்களின் பிரிவு குறித்து, வித்தியாரத்தினம் நவாலியூர் சோ நடராசன் அவர்கள் அனுப்பிய இரங்கற்பா.]

இறந்தனை என்பதை யறிந்தன மின்றே
பிறந்தது தண்ணூர் தமிழ்தரு தஞ்சையில்
சிறந்தது பழங்குடி யீழவள நாட்டில்
தமி ழறிந்தனை சைவம் போற்றினை
அமிழ்தெனப் பண்பினை யாரப் பகிர்ந்து
நம்மின மழியா நலன்பல செய்தனை
சொல்லாற் றமிழினைக் காப்பவர் காக்க
செயலாற் தமிழொடு சால்புங் காத்தனை
நில்லா வுலகில்
கல்லாத வர்க்கும் பொல்லாதவர்க்கு
முல்லைபோல மலர்ந்து
நல்லார் எனச் சொலும் நானயம்பெற்றாய்
சில்லறை மலிந்தவித் திருவுடை நாட்டில்
தொல்லை மரபினைப் பேணி
நல்ல புதுமையை நாட்டினை
ஞானப்பரம்பரை
சொல்லின் செல்வம்
ஆன்றவிந் தடங்கிய செம்மை
நடு நுகத்துப் பகல் போல
நல்லதை எங்கு கண்டாலும் நயந்தனை
நீ நீடு வாழிய நெடுந்தகை
பண்படு தலைவரில் பாரினில் நீயே
கண்படு புரவலனுகவுங் கற்பனைச்
செஞ்சொலின் புலமைச் செல்வனுகவும்
திகழ்ந்தனை
புறஞ் சொலி வாழும் பதடிகள்
கறங்கியபழி கேட்டு
நன்றி கொல்லும் நயவஞ்சகர்
அறிவுடை யாரை யழிக்க மழுவெடுக்கும்
கேள்வி யில்லாக் கீழோர் போலாது
நீயே, தக்கார் தகவிலர் தகைமைநாடியறிந்து
மிக்க நேயம் செய்குவை
கல்வி போற்றினை செல்வம் ஈதலின்
கலைகள் வளர்த்தனை கடவுளைக் காட்டலின்
சித்த மழகிய செல்வ
எத்தனை யுகமினி யெனவேங்கிடுமே.

## தேகவியோகம்

வண் - கிழக்குக் காலஞ்சென்ற பிறக்றர் திரு. சு. சிவப்பிரகாசம் அவர்களது மகனும் டாக்டர் க. இராசா அவர்களது மருகருமாகிய இளைப்பாறிய மராமத்துப் பகுதி இன்ஸ்பெக்றர் திரு. சி. பொன்னம்பலம் அவர்கள் 31—1—65ல் அன்றுசிவபதமடைந்தனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. மகேந்திரன், திருமதி கதிர்காமத்தம்பி சரஸ்வதி, செல்வி விமலாதேவி, செல்வன் நடராசா, செல்வன் கந்தசுவாமி ஆகியவர்கள் அவருடைய பிள்ளைகளாவர். அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழையமாணவர்களுளொருவர். சென்ற மூன்று வருடங்களுக்குள் கல்லூரியில் புதிய கட்டடங்களும் பழைய கட்டடத்திருத்தல்களும் நடைபெற்றன இப்பெரியார் ஒருவிதவேதனமும் பெறுமல் அவ்வேலைகளைத் திறம்பட நடைபெறக்கூடிய வகையில் மேற்பார்வைசெய்து பெரும்உதவி புரிந்தனர் அவருடைய அரிய சேவையைக்கவனித்து31-1-65ல் நடைபெற வேண்டிய கல்லூரிப் பழையமாணவர்கள்சங்கவருடாந்தக்கூட்டம் பின்போடப்பெற்றது. அவருடைய பொதுநலசேவையும் சமயப் பற்றும் பாராட்டற்குரியன. அவருடைய மனைவி மக்கள் மற்றும் நெருங்கிய சுற்றத்தவர்களுக்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தர்மடம் யாழ்ப்பாணம்,
1. இளையதம்பிசங்கரநமசிவாயம்
2. சங்கரநமசிவாயம் பெண் ராசபூபதி — வழக்காளிகள்.
வழக்கு இல. M. B. 4805
எதிராக
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் இதம்பரப்பிள்ளை சிவரத்தினம் எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4805ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1965-ம் ஆண்டு பங்குனிமாதம் 13ந்தேதி (13-3-65) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா3887ம் 14-5-1962தொடக்கம் 31-1-63 வரைக்கும் ரூபா 3000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின்முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 263-33 சதமும். இவற்றில் ரூபா 3700/- கட்டப்பட்டுள்ளது

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக்கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "உமையவயல், பிள்ளைப்புலமும் தாளைமடையும்" நெற்பரப்பு 2½. வீடும் கட்டடங்களும் கடையும். செய்பயிர் வான்பயிர்களும். கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் அதற்குரிய வழிவாய்க்கால் உரிமையும். எல்லை கிழக்கு P. ஞானசேகரம் பெண் மங்கையற்கரசியின் ஆதனம். வடக்கு ரேட்டு, மேற்கு கந்தையா மகள் சிவஞானத்தின் உரிமையாளருக்கு உரிய ஆதனம். தெற்கு செல்லப்பா கைம்பெண் செல்லம்மாவின் ஆதனம். D 204/264. D 273/25 ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும் உத்தரவுபெற்ற ஏலதாரரும்
Commissioner of Sales, Valuer & Licensed Auctoneer.
தபாற்கந்தோரடி,
நவாலி, மானிப்பாய்,
28-1-65.
M. 255 5-2-65.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 4779
யோன் செல்லத்துரை கரைஊர் - வழக்காளி.
எதிராக
பிலிப்பு மரியாம்பிள்ளை நாவாந்துறை —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4779ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1துண்டுக்காணி 1965ம் ஆண்டு பங்குனி மீ 3 உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2517-ம் 26-4-62 தொடக்கம் 29-11-62 வரைக்கும் ரூபா 2000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 295-87 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று யாழ்ப்பாணம் இறை பொம்மைவெளி என்னும் காணி நிலப்பரப்பு 11, 7/8 குளி, வீடும் உண்டு. எல்லை கிழக்கு ரேட்டு வடக்கு ஒழுங்கை. அநாசி கைம்பெண் மரியாள். உரிமைக்காரரின் ஆதனம் தெற்கு கேபிரியல் யோசெப்பின் ஆதனம்.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
நம. 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
23-1-65.
M 266 5-2-65.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்
அருணாசலம் பதஞ்சலிநாதன் கந்தர்மடம், யாழ்ப்பாணம் —வழக்காளி
இல. M.B. 5406
எதிராக
1. தம்பு தம்பிப்பிள்ளை அல்லது தம்பு
2. நீலகுட்டி நாகலிங்கம் தம்புவும் பெண்
3. அன்னபூரணமும்
4. தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் எல்லோரும் பரமேஸ்வராக் கல்லூரி ஒழுங்கை திருநெல்வேலி யாழ்ப்பாணம் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M.B. 5406-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1965-ம் ஆண்டு பங்குனிமாதம் 27-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி 30 நிமிடம் தொடக்கம் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைச்தொகை:

முதலும் வட்டியுமாக 10230 ரூபாவும் இன்னும் 7500 ரூபாவிற்கு நூற்றுக்குப் பத்துவீத வட்டி 13 - 2 - 63 தொடக்கம் 29-8-63 வரைக்கும் கூட்டிக்கூட்டிய தொகைக்கு 29 - 8 - 63 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் நூற்றிற்கு ஐந்து வீத வட்டியும் செலவும் ரூபா 470-05. அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 331 - 90 சதம், வெலியாத்துச் செலவு ரூபா 94 - 95 சதம். இனிமேல் ஏற்படுஞ் செலவு ரூபா 43-20 சதம்.

ஆதன டாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியும், நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலி யிறை "தேவத்தறை கிழக்குப்பதி" பரப்பு நில. லா, 5 குளிகள் 2 3/8 வீடும், கிணறும், பயிர்களும், அதைச்சேர்ந்தவைகளும். இதன் எல்லைகள் கிழக்கு கந்தர் சண்முகத்திறுதனம், வடக்கு முத்துக்குமாரு சிவக்கொழுந்து விறுதனம், மேற்கு கதிரவேலு தம்பிப்பிள்ளைக்கும், கதிரவேலு முத்துத்தம்பிக்கு முரியவாதனம்; தெற்கு பரமேஸ்வராக்கல்லூரி ஒழுங்கை. இறு முழுவதும்.

நா, க. பொன்னுத்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"அகிலகம்" 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம், 29-1-65
M 267 5-2-65

## கோட்டு விற்னவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில்
1. கைதடி நாவற்குழி சின்னப்பா கந்தையா ஆறுமுகமும்
2. பெண் வள்ளியம்மையுப் —வழக்காளிகள்
இல. 2742/M.B.
எதிராக
1. சாவகச்சேரியைச் சேர்ந்த மறவன்புலோ நாகமுத்து சின்னத்துரையும்
2. பெண் இலட்சுமியும் —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2742-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப்படி கீழ்க்காணுமாதனவிடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1965-ம் ஆண்டு சித்திரை மீ 3-ம் உ சனிக்கிழமை காலை 10 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 460-11 சதமும் 26-8-1963 தொடக்கம் 25-6-64 வரையும் ரூபா 350-க்கு 15 வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் செலவு ரூபா 157-95 சதமும். இதில் 2.11.63 - ல் கொடுபட்ட ரூபா 220-ம். 25-8-64 கொடுபட்ட ரூபா 158 கழித்து மிகுதி.

ஆதனவிடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி; நாவற்குழிக்கோவிற்பற்று மறவன்புலோ இறை கோவில் வயலும் சோவில்வயல் மணற்காடும் நெ. பா. நில. இல. 15 இதில் கிழக்குப்பக்கமாக நி பா. 7 3/4. இது அளவையின்படியும் ஆட்சிப்படியும் நீ. பா. 8. இதில மேற்குப்பக்கமாக நி. பா, 2 நீக்கி மிகுதி நி. பா. 6. ஆதுக்கெல்லை கிழக்கு செல்லையா கைம்பெண் சிவக்கொழுந்துக் குரிய வாதனம், வடக்கு சிதம்பரி சுந்தரத்துக்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள், மேற்கு அரியகுட்டி சண்முகத்துக் குரிய வாதனம், தெற்கு ஒழுங்கை. குறித்த நிலப்பரப்பு ஆறும், வீடுகளும், பயிர் வகைகளும். இவ்வாதனம் யாழ்ப்பாணக் காணிப்பதிவு கந்தோரில் F 339/112-ல் பதியப்பட்டிருக்கிறது

[illegible]
தொழிலினர்
சாவகச்சேரி, 9-2-65.
M. 264 5-2-65.

## செய்தித் தாள்களும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன. ஆனால் அப்முயற்சிகளெல்லாம தோல்வியையே அடைந்தது. இன்னுமொரு முறை முயற்சி செய்து தினகரன், தினமின போன்ற பத்திரிகைகளை அரசாங்கம் தமது ஆட்சிக்குள் அடக்கி வைக்க முயல்கிறது. ஒரு பத்திரிகை நிலையத்தை அரசாங்கம் உரிமையாக்கவேண்டுமானால், அப்பத்திரிகை மக்களின் கீழான இயல்புகளைத் தூண்டக்கூடியதாக அமைந்திருக்க வேண்டும். சமூகமாகிய பாற்கடலிலே ஒரு துளி நஞ்சு பாய்ச்சுதல்போல இருக்கும், சில செய்தித்தாள்களில் அரசாங்கத்துக்கு மாறுகச் சூழ்ச்சிகள், கொலைகள், சாதிச்சண்டைகள், வேலை நிறுத்தங்கள், நம நாட்டுப் பெரியார்களின் குடும்பச் சண்டைகள், சினிமா நட்சத்திரங்களின் கள்ளக்காதல்கள் விவாகரத்துக்கள், சோர நடவடிக்கைகள் யாவும் இடம் பெறுவதுண்டு.

சில செய்தித்தாள்கள் துரும்பைத் தூணுகவும், மடுவை மலையாகவும் கற்பித்து வருகின்றன. இன்னும சில சஞ்சிகைகள் நிர்வாண உருவங்களையும், ஆபாச கருத்துக்கள் அடங்கிய கதைகளையும் வெளியிட்டு மக்கள் மனங்களைக் கீழ் நிலையில் வீழ்த்துகின்றன. அத்துமீறி நடாத்தப்படும் செய்தித்தாள்களுக்குக் கட்டுப்பாடு வைப்பது நல்லது என்று கருதுவது பொருத்தமாகும். ஆனால் அரசாங்கம் அதை ரஷ்யா போன்ற தேசங்களில் நடாத்தப்படுவதைப்போல நடாத்த முன்வருமானல் அதற்கு விருப்பமான உண்மைகளையே வெளியிடும்; மேலும் யதேச்சேதிகாரம் தலையிடும் சுதந்திரம் பறிபடும். செய்தித்தாள்கள் நியம எல்லையைக் கடந்து நடந்தன எனில் அதற்கு ஏற்ற பரிகாரம் செயதித்தாள்தாள்கள் சபையொன்று ஏற்படுத்துதல் ஆகும். அதுவே தணிக்கையை நடத்த வேண்டும். சினிமாக்கலை, வானொலிக்கலை, வைத்தியக்கலைகளில் பணி செய்பவர்கள் ஒழுங்கு நெறிதவறி நடந்தால் அவர்களைத் தள்ளி வைத்தலைப்போல, செய்தித்தாள்கள் பொறுப்புணர்ச்சியின்றி நடந்தால் அவைகளை செய்தித்தாள் அட்டவணையிலிருந்து நீக்கிவிடுதல் வேண்டும். (வளரும்)

யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14.

இவ்வாரம் 7-2-65 — 13-2-65

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

சொந்தத்தொழில்களில் முன்னேற்றம். பழையமுதலீடுகளால் பயன் பகைவர்க்குத்துள்பம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

வயிற்றுக்குழப்பம், குடும்பச் செயல்களில் குழப்பம். எனினும் வார நடுவில் நிம்மதி இருக்கும். தொழில் துறையில முன்னேற்றம்.

**மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.**

உறவினருடன் பகை, குடும்பச் செயல்களில்முன்னேற்றம். வியாழன் வலுர உடல்நலக் குறைவு கிழமைக்கடைசியில் நன்மை,

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,**

எதிர்ப்புக்களும் இகழ்ச்சியும் உண்டாகும். புதுச்செயல்கள் தடைப்படும். உடல் நலத்தைப் பேணவும்.

**சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.**

கலகங்களுக்கு முந்துவீர்- குடும்பத்தில் குழப்பம். பொருள் வரவு.

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

கிழமையில் முன்னரைவாசிக் காலம் உகந்ததல்ல. ஞாயிறு திங்கள் எச்சரிக்கை. வியாழனுக்குப்பின் சுகம் உண்டு பகை நீங்கும்.

**கண்ணப்பநாயனர் குருபூசை**

—:—

தை மீ 29 உ 11-2-65 வியாழக்கிழமை சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கண்ணப்ப நாயனர்குருபூசைசிறப்பாகக்கொண்டாடப்படும். இரவு 7மணிக்கு,கடவுளாராதனை,தமிழ் மறையோதல் ஆகியவற்றின்பின் பொன். அப்புக்குட்டி அவர்கள் 'கண்ணப்ப நாயனர்" என்னும் பொருள்பற்றி விரிவுரைநிகழ்த்துவார்கள்.

**துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்**

முதலிரு நாட்களும் புதுத் தொழில்களுக்கு உகந்தவை. புதன் வியாழன் எச்சரிக்கை. எஞ்சிய காலம் நன்மையானது. சுகக்குறைவு.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

உட்பகைவர்களால் தொல்லை, ஏவலாளர்களிடம் எச்சரிக்கை. குடும்பத்தில்தொல்லை. வியாழன் பிற்பகல், வெள்ளி, சனி எச்சரிக்கை.

**தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

பொருள் வரவு. எதிர்ப்புக்களைச் சமாளிப்பீர். நிலங்களால் நன்மை. புகழ் உண்டு. பொது வாழ்வில வெற்றியுமுண்டு.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்**

நண்பர்களுடன் கருத்து வேறுபாடும், கலகமும், வயிற்றுக் குழப்பம், தந்தை சுகம் குன்றும், வேலை அதிகம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி**

நிம்மதி இல்லை. உடல் நலம் குறையும். அலுவலகத்தில தொல்லை. ஊர்திகளால் (வாகனங்களால்) செலவு அதிகம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதிரேவதி. 1, 2,3ம் பாதம்.**

பொதுவாக நல்ல வாரம். நண்பர்களால் உதவி. சுகக்குறைவு. குடும்பத்தில தொல்லை.

## எமது கருத்து

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

நூல்களில் மேலும சிலவற்றைப் பாட அட்டவணையில் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறோம்,

'மணிவாசகரில் பொருளாதாரங் காண்பதுவும்' 'ஆக்கபூர்வமான சமூகப் போராட்டங்களின் காரணமாகவே பக்தி வெள்ளப்பெருக்கெடுத்தோடியது' என்றும் கூறுவது அகவுலக அனுபவமின்றிப் புறவுலகக் கணகொண்டு பார்த்ததன் விளைவாகத் தோன்றியதாகும். ஆனால் சமய உண்மைகளைப் புறவுலகக் கண்ணேட்டத்திற் காண முடியாது; அதற்கு அகக்கண்ணேட்டத்தின் நுண்ணிய பார்வை அவசியம் என்பதை மணிவாசகரின் பொருளாதாரங் காண்போர் நுனித்து நோக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 5-2-1965 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org